**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register) CC.810/2024
Sessions)

(Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| Name | வே.குணசீலன் | -- | |
|---|---|---|---|
| Father's Name | வேலு | Calling | |
| Village | | Religion | |
| Taluk | திருச்சி | Age | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th Day of July 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர்–I, விருதுநகரில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர்–II, விருதுநகரில் முழு கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வந்தபோது நானும் திருமதி.பெ.சுசீலா, துணை இயக்குநர்–II ஆகியோருடன் இணைந்து தி அய்யன் கலர் மேட்ச் ஒர்க்ஸில் (VNR7579) , ச.எண்.686/1C, 686/2, ஈஞ்சார் கிராமம், சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம் என்ற தொழிற்சாலையில் மேற்கொண்ட தீ விபத்து புலனாய்வில் இத்தொழிற்சாலையில் 07.05.2024 அன்று பிற்பகல் சுமார் 01.00 மணியளவில் ஆய்வு செய்தபோது மேற்படி தொழிற்சாலையில் கடந்த 06.05.2024 அன்று வழக்கம்போல் அறை எண்.8 (dipping shed) –ல் சிவப்பு நிற தீக்குச்சிகளுக்கு வார்னிஷிங் செய்யும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அன்று பிற்பகல் சுமார் 03.45 மணியளவில் திரு.காத்தப்பன், வயது–58, த/பெ.ராக்கண்ணதேவர் மற்றும் திரு.கிருஷ்ணன், வயது–56, த/பெ.கருப்பையா ஆகிய 2 தொழிலாளர்கள் 50mm அளவு கொண்ட தீக்குச்சிகள் ஒரு வரிசைக்கு 32 தீக்குச்சிகள் வீதம் 40 பக்க வரிசைகளைக் கொண்ட 3*1.5 அடி அளவிலான கட்டைகளை சுமார் 100 எண்ணம் அறை எண்.8(dipping shed)–ல் அடுக்கி வைத்துக்கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக உடைந்து கீழே கிடந்த தீக்குச்சிகளின் மீது கட்டை பட்டு உராய்வு ஏற்பட்டதில் உடனடியாக தீப்பிடித்து கரும்புகையுடன் கூடிய தீ கிழம்பி அறை முழுவதும் பரவியது. அதனைக் கண்டு அவ்விரு தொழிலாளர்கள் உடனடியாக அவ்வறையை விட்டு வெளியேறிவிட்டனர். இத்தீவிபத்தில் அறை எண்.8 (dipping shed)–ல் அறையின் கதவுகள் மற்றும் மேற்கூரை முற்றிலும் சேதமடைந்ததுடன் ஆங்காங்கே சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அறையின் கிழக்குப் பகுதியில் உள்ள அறை எண்.8A (drying dipping shed) சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இத்தீவிபத்து குறித்து

தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் ஆகிய இரு நபர்களுக்கு தனித்தனியே தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தொழிற்சாலை விதிகள் 1950 ன் படி காரணம் கோரும் அறிக்கை வழங்கப்பட்டது. காரணம் கோரும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முரண்பாடுகளின் விவரமாவது.

1) பிரிவு 38(1) மற்றும் பிரிவு 41 விதி 61 F

எந்தவொரு தொழிற்சாலையிலும் தீ விபத்து ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலும் பரவாதிருக்கும் வகையிலும் செய்யத்தக்க முனனேற்பாடுகளை முறையாகச் செய்யப்பட வேண்டும். மேலும் தொழிற்சாலையின் எந்த ஒரு பணியோ பணி செயல் முறையோ பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடலுக்கு தீங்கு ஏற்படும் வகையில் கையாளப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ கூடாது.

2) பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 3(f)

மேற்கண்ட சட்டப்பிரிவு மற்றும் விதியின் படி கலர் தீக்குச்சிகள் உற்பத்தி நடைபெறும் அனைத்து அறைகளின் தரைப்பகுதி குறைந்தது 3 மி.மீ. தடிமன் உள்ள சீரான மேற்பரப்பை கொண்ட ரப்பர் விரிப்புகள் விரிக்கப்பட வேண்டும். ஆனால் மேற்படி தொழிற்சாலையில் ஆய்வு செய்தபோது அறைஎண்.8 ல் தரைப்பகுதி முழுவம் விரிக்கப்பட்டிருந்த ரப்பர் விரிப்புகள் முழுவதுமாக விரிக்கப்படாமல் சீரற்ற விபத்தை உண்டாக்கக்கூடிய வகையில் இருந்தது.

3) பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(d)

மேற்கண்ட சட்டப்பிரிவு மற்றும் விதியின் படி கலர் தீக்குச்சிகள் உற்பத்தி தொழிற்சாலையின் அனைத்து அறைகளின் வாசல் பகுதிகளிலும் தொழிலாளர்கள் தங்கள் பாதங்களை சுத்தம்செய்து கொள்ள ஏதுவாக கால் மிதியடிகள் போடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மேற்படி தொழிற்சாலையில் ஆய்வு செய்தபோது அனைத்து அறைகளின் வாசல் பகுதிகளிலும் தொழிலாளர்கள் சுத்தம் செய்து கொள்ள ஏதுவாக கால் மிதியடிகள் போடப்படவில்லை.

மேற்கண்ட இனங்களுக்கு வழக்கு தாக்கல் செய்ய அனுமதியாணை பெறும் பொருட்டு வழக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மதுரை கூடுதல் இயக்குநர் அவர்களிடம் வழக்கு தாக்கச் செய்ய அனுமதியாணை பெறப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி தொழிற்சாலைக்கு தொடர்ந்து பாதுகாப்பாக தீக்குச்சிகள்உற்பத்தி பணிகளை மேற்கொள்ள கட்டடங்கள் முழுவதும் சேதமடைந்த காரணத்தினால் தொழிற்சாலையின் மீது உற்பத்தி தடையாணை தொழிற்சாலை சட்டம் 1940(2) கீழ் உற்பத்தி தடையாணை வழங்கப்பட்டது. மேல்நடவடிக்கையின் பொருட்டு காரணம் கோரும் அறிவிப்புக்கு உரிமையாளர் மற்றும் மேலாளரிடமிருந்து பதில் கடிதம் பெறப்படாத காரணத்தினால் மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு வழக்கு முன்மொழிவு பிரேரணை மதுரை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு ஆலை நிர்வாகத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் வழக்கு தொடர அனுமதி பெறப்பட்டு உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆய்வு மேற்கொண்ட தொழிற்சாலை சட்டப்படி அனுமதி பெறப்பட்ட தொழிற்சாலை என்றால் சரிதான். விபத்திற்கு பின்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்பட்ட தொழிற்சாலை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட தகவல் எனக்கு துணை இயக்குநர்–II மூலமாக தெரியவந்தது. துணை இயக்குநர் –I ஆக சுசீலா என்பவர் பணியில் இருந்தார். அவருடைய தகவலின் அடிப்படையில் நானும் அவரும் ஆய்வு மேற்கொண்டோம். 07.05.2024 ம் தேதி தி அய்யன் கலர் மேட்ச் ஒர்க்சில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்தத் தகவலை சுசீலா சொல்லி எனக்குத் தெரியும். Form 18, 07.05.2024 அன்று எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. அந்த 2 தகவலும் மேலாளரால் கொடுக்கப்பட்டது. மேற்படி தகவலின் அடிப்படையில்தான் நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம் என்றால் சரியல்ல. Form 18 ல் எங்கள் உயர் அதிகாரிகள் நேரம் குறிப்பிட்டுள்ளனரா என்று கேட்டால் (சாட்சி Form 18 ஐ பார்த்துவிட்டு) இல்லை தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் குற்றச்சாட்டில் உள்ள கூற்றுகள் அனைத்தும் விபத்துக்குப்பின்னர் ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த தீவிபத்து எதிர்பாராத விதமாக நடந்த தீவிபத்து என்றால் சரிதான். நிர்வாகமோ தொழிலாளர்களோ முறையற்ற நடவடிக்கையாலோ விபத்து ஏற்பட்டிருந்தால் அது வேறுவிதமாக இருக்கும் என்றால் அதுபற்றி சொல்ல முடியாது. பட்டாசுகளின் உராய்வின் காரணமாகவோ தட்ப வெப்பநிலை மற்றும் காற்றின் போக்கு ஆகியவற்றினால் தீ விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதை யாராலும் தடுக்க முடியாது என்று கேட்டால் அதைப்பற்றி சொல்ல முடியாது. இந்த விபத்தில் யாருக்கும் காயம் இல்லை. இந்த தீ விபத்து எப்படி நடந்தது எவ்வாறு நடந்தது என்று விசாரணை செய்தோம். அன்றைய தினம் பணியில் இருந்தவர்கள் சம்பந்தமாக பணிப்பதிவேடு பார்வையிட்டேன். அதைக் கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தொழிலாளர்கள் சம்பவத்தன்று உரிய பாதுகாப்பு கவசங்கள் அணிந்திருந்தார்கள் என்றால் அணியாவிட்டால் காயங்கள் ஏற்பட்டிருக்கும். Form 18 ல் மேற்படி நிறுவனம் சுவரில் 06.05.2024 ம் தேதி ஏற்பட்ட தீவிபத்தின் போது சேதமடைந்த அறையை சரிசெய்து உற்பத்தி மேற்கொள்ள அனுமதி கேட்டார்கள். 1 வது குற்றச்சாட்டின் எதிரி நிறுவனம் முறைகேடு நடந்துள்ளதா என்றால் முறைகேடு நடந்துள்ளது. விபத்து ஏற்படும்போது ரப்பர் விரிப்புகள் சேதம் ஏற்பட வாய்ப்புண்டு. நாங்கள் பொதுவாக 6 மாதங்களுக்கு ஒருமுறை முறை ஆய்வு மேற்கொள்வோம். அவ்வாறு ஆய்வு செய்யும்போது ரப்பர் விரிப்புகள் சேதமடைந்தது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தோமா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. தொழிற்சாலை முறையான ரப்பர் விரிப்புகள் விரித்து தான் நடந்தது என்றால் சரியல்ல. ஆய்வின்போது 2 அறைகள் தான் சேதமடைந்து காணப்பட்டது. தீ அணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர் என்றால் சரிதான். காவல்துறை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும்போது ரப்பர் விரிப்புகளில் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. திரி வெட்டும் அறைகளில் எந்தப்பாதிப்பும் இல்லை என்றால் சரிதான். தொழிற்சாலையின் அனைத்து

அறைகளிலும் மிதியடிகள் விரிக்கப்படவேண்டும். தொழிலாளர்கள் வேலை நேரத்தில் தான் மிதியடி விரிப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி தொழிற்சாலையில் முறையாக மிதியடி விரித்து தான் பணிகள் நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி தொழிற்சாலை அமைந்துள்ள நிலத்தின் சர்வே எண்.686/1C, 686/2. தொழிற்சாலையின் மெயின் கேட் எந்தத் திசை நோக்கி உள்ளது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஆய்வு மேற்கொண்ட அறைகளில் 2 வாசல்கள் இருந்தது. அந்த வாசல்கள் எந்ததிசையை நோக்கி இருந்தது என்று ஞாபகம் இல்லை. சேதமடைந்த இரப்பர் விரிப்புகளை கைப்பற்றவில்லை. புகார் மனுவை நான் தாக்கல் செய்யவில்லை. ஆய்வறிக்கை நான் தான் தயார் செய்தேன். நான் மேற்படி தொழிற்சாலைக்கு செல்லவில்லை என்றும் அலுவலகத்தில் வைத்து ஆய்வறிக்கை தயார் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. முறையான புகார் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கவில்லை என்றும் அதனால் ஆய்வறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அன்றைய விபத்தின் குறைகள் களையப்பட்டு தொழிற்சாலை பின்னர் நன்றாக இயங்கி வருகிறது என்றால் சரிதான். எங்கள் துணை இயக்குநருக்குத்தான் ஆவணங்கள் பற்றி தெரியும் என்றால் ஆவணங்களை நான் தயாரித்து துணை இயக்குநர் மூலமாக மேலதிகாரியிடம் அனுமதி பெற அனுப்பினேன். அந்த விவரங்கள் வழக்குக் கோப்பில் உள்ளது.

**மறு விசாரணை** இல்லை

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.07.28 17:56:57 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**